புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

==============================================================================

*கந்தர்வன் கவிதைகளில் மார்க்சிய அழகியல்*

*முனைவர் கு. மணிகண்டன்,*
*உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,*
*அருள்மிகு பழனியாண்டவர் கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரி,*
*பழனி-624 601, தமிழ்நாடு, இந்தியா*

==============================================================================

*ஆய்வுச் சுருக்கம்*

*மனித வாழ்வியலின் அனுபவத்தில் இருந்தே இலக்கியங்கள் தோன்றுகின்றன. அனுபவம் ஒவ்வொரு மனிதருக்குள்ளும் ஒவ்வொரு விதமான தரிசனத்தைக் கொடுக்கிறது. மானிடத்தின் மீது தீராத காதலும், தேடலும் கொண்ட படைப்பாளியே கலை இலக்கியங்கள் யாவும் மக்களுக்கானது எனப் பிரகடனப்படுத்துகிறார். ஜெர்மானிய தத்துவவாதி காரல் மார்க்ஸ் மனிதகுல வரலாற்றை வரலாற்றுப் பொருள் முதல்வாதம் என்ற தத்துவம் கொண்டு ஆய்வு செய்துள்ளார். மனிதகுலம் கடந்து வந்த சமுதாய அமைப்பு முறையை, தொல் பொதுவுடைமைச் சமுதாயம், நிலவுடைமைச் சமுதாயம், முதலாளித்துவச் சமுதாயம், பொதுவுடைமைச் சமுதாயம் ஆகிய படிநிலை வளர்ச்சிகளைப் பெறுவதாகக் கூறிகிறார். உற்பத்தி உறவுகளின் அடிப்படையில் முதாளித்துவச் சமுதாயத்தில் முதலாளி, தொழிலாளி என்ற வர்க்க முரண் கொண்ட பிரிவுகள் தோன்றுகின்றன. முதலாளி என்ற வர்க்கம் சுரண்டும் வர்க்கமாகவும், தொழிலாளி என்ற வர்க்கம் சுரண்டப்படும் வர்க்கமாகவும் இருக்கிறது. சுரண்டப்படும் வர்க்கத்தின் சுரண்டலுக்கான காரணக் காரியங்களை மார்க்சிய தத்துவவழி நின்று பிரச்சாரம் செய்வதே மார்க்சிய அழகியல் ஆகும். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைக் கொண்ட அரசை அமைப்பதற்கு வேண்டிய கருத்துப் பிரச்சாரத்தை இலக்கியங்கள் முன்னெடுக்க வேண்டும் எனக் கூறுகிறது. இவ்வகையில் கந்தர்வன் கவிதைகளில் புதைந்து கிடக்கின்ற சமத்துவச் சமுதாயத்திற்கான முன்னெடுப்புகளை மார்க்சிய அழகியல் கொண்டு இக்கட்டுரை விளக்குகிறது.*

*திறவுச் சொற்கள்*
*சித்தாந்தம், தத்துவம், பெண்ணியம், வர்க்கம், சமுதாயம், பொருள் முதல் வாதம், சோசலிசம்.*

*முன்னுரை*

*தமிழ்மொழியில் தோன்றிய இலக்கிய வகைமைகளில் முதன்மையானவை சங்க இலக்கியங்கள் அவை அகவாழ்வைப்பாடின, பக்தி இலக்கியங்கள் தெய்வங்களைப் பாடின. புற இலக்கியங்கள், நிலவுடைமையாளர்களை, அரசர்களை, வெற்றி கொண்டவர்களைப் பாடின. இவையே இலக்கியத்திற்கான உள்ளடக்கமாகவும் இருந்து வந்தது. இந்த உள்ளடக்கத்தைக் குலைத்துப்போட்டது 1917 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஏற்பட்ட ரஷ்ய புரட்சி. ஜார் மன்னர்களை வீழ்த்தி லெனின் தலைமையில் அமைந்த பாட்டாளிவர்க்க நலன் காக்கும் அரசு உலகம் முழுவதும் இருக்கின்ற சுரண்டப்படுகின்ற உழைப்பாளி மக்களின் விடுதலையை பிரச்சாரம் செயதது. இந்தியாவில் 1920 களில் இக்கருத்துகள் வேகமாகப் பரவின. இதன் விளைவு தமிழ் இலக்கியச் சூழலில் இதுவரை இருந்து வந்த பாடு பொருளும் கொள்கைகளும் மாற்றம் கண்டன. இச்சூழலில் புதுக்கவிதையைப் பாடியவர்களில் பெரும்பான்மையானவர்கள் சமத்துவச் சமுதாயத்தைப் படைக்கும் இலக்கியப் பணியை மேற்கொள்ளத் தொடங்கினர். அவர்களில் முதன்மையானவர் கந்தர்வன். அவர் புனைந்த கவிதைகள், கிழிசல்கள், சிறைகள், மீசைகள் என்று மூன்று நூல்களாக வெளிவந்துள்ளது. இவை மூன்றையும் தொகுத்து கந்தர்வன் கவிதைகள் என்ற தொகுப்பு வெளிவந்துள்ளது. புதுக்கவிதைக்குள் நின்று கந்தர்வன் செய்யும்*

*கலக அரசியலையும், சமூக அரசியலையும், பண்பாட்டு அரசியலையும், மார்க்சிய அழகியல் வழியில் நின்று ஆய்வுச் செய்யப்படுகின்றது.*

*மார்க்சிய இலக்கிய அழகியல்*

*மார்க்சிய இலக்கியத்திற்கு அடிப்படையான அழகியலை மார்க்சிய வாதிகள் “மார்க்சியத் தத்துவத்தில் ஈடுபாடு,பாட்டாளி வர்க்கத்திற்கு தொண்டு செய்தல்,சுரண்டப்படும் வர்க்கத்திற்குச் சார்பாக நின்று வாதிடுவது,தொழிலாளர் போராட்டங்களில் நெருங்கியத் தொடர்பு,சோசலிச மனித நேயத்தை வலியுறுத்துவது, சமுதாயம் முன்னோக்கித்தான் வளரும் என்ற நம்பிக்கையை வளர்த்தெடுப்பது, பிற்போக்கு மற்றும் பழைமைவாதக் கருத்துக்களுக்கு எதிர்ப்பு தெரிவிப்பது.”4 கூறிகின்றனர்.“தன்னைப் பேணிக்காத்துக் கொள்வதற்கும் அழியாமல் நிலை நிறுத்திக் கொள்வதற்கும் ஒன்றாக இணைந்துள்ள ஒரு மானிடக் குழு சமூகம் எனப்படுகிறது”1 இத்தகைய சமுதாயத்திடையே தோன்றிய பொருள் உற்பத்தி நிலைகள், அப்பொருள் உற்பத்தியால் ஏற்பட்ட உறவுமுறைகள், பொருள் காரணத்தால் காலத்துக்குக் காலம் மாறுபடும் அரசுமுறைகள், சமுதாயத்தின் உறவினில் தோன்றுகின்ற வர்க்க வேறுபாடுகள், வேறுபட்ட வர்க்கங்களின் மோதல்கள் போன்ற வரலாற்று ரீதியான இயக்க உண்மைகளின் பொது விதிகளைப் பற்றிய விஞ்ஞானமே தத்துவம் என்று கருதப்படுகிறது. “தத்துவம் என்பது முடிவில்லாதது, காலங்கள் தோறும் நாளும் வளரும் உண்மைகள் ஆகும். தத்துவம் நிலையானது என்று கூறுவது தவறு. இன்று உணர முடியாத ஒன்று நாளை உணரத்தக்கதாக உள்ளது. மாறுபடும் இயற்கை, மாறுபடும் வாழ்க்கை விதிமுறைகளுக்கேற்பத் தத்துவமும் மாறுபடுகிறது”2 என்கிறார் காரல் மார்க்ஸ். இதன் முன்னரே தோன்றியது ஹெகலின் (1770 – 1873) பொருள் முதல் வாதத் தத்துவம், இத்தத்துவத்தின் அடுத்தக்கட்ட வளர்ச்சி நிலையே மார்க்சிய இயங்கியல் பொருள் முதல்வாதம் மற்றும் வரலாற்றுப் பொருள் முதல் வாதம் ஆகும்.*

*வரலாற்றுப் பொருள் முதல்வாத தத்துவத்தின் அடிப்படையில் சமூக இயக்கத்தின் படி நிலையில் முதலாளித்துவச் சமூகம் அமைகின்றது. இச்சமுதாயத்தின் பெரும் பகுதியான பலம் வாய்ந்த வர்க்கம் தொழிலாளி வர்க்கமாகும். அவ்வர்க்கம் சமுதாய மாற்றத்திற்கான போராட்டத்தை தொடர்ந்து நடத்திக்கொண்டே இருக்கும். அதாவது “ பொருளாதாரப் போராட்டம், அரசியல் போராட்டம் ,கருத்துப் போராட்டம்”3 இந்த மும்முனைப் போராட்டங்கள்தான் பாட்டாளி வர்க்க விடுதலைக்கான அடிப்படைக் காரணிகளாகின்றன. இருந்தபோதிலும் பொருளாதாரப் போராட்டத்தையும் அரசியல் போராட்டத்தையும் நடத்தும் பாட்டாளி வர்க்கம் சுரண்டும் வர்க்கம் உருவாக்கி வைத்திருக்கும் கருத்துக்களின் பிடியிலிருந்து உழைக்கும் மக்களை விடுவிப்பதற்குத் தேவையான கருத்துப் போராட்டத்தையும் நடத்த வேண்டும் என்பது மார்க்சியக் கொள்கையின் அடிப்படையாகும். கருத்துப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவதன் மூலமே சுரண்டும் வர்க்கங்களின் நலனைக் காக்கும், சுரண்டும் செயலை நியாயப்படுத்தும் பழைமைக் கருத்துக்களை அழிக்கமுடியும். இந்தக் கருத்துப் போராட்டத்திற்குப் புரட்சிகர கலை இலக்கியங்களைப் படைப்பது அவசியம் என்று மார்க்சியம் கூறுகிறது.*

*கந்தர்வனும் படைப்பு சூழலும்*

*மானுட அனுபவங்களை வெளியிடுவதில் படைப்பிலக்கியங்கள் மிக முக்கயமான இடத்தை வகிக்கின்றன. மானுட வாழ்வின் பிரதிபலிப்பாக விளங்கும் சிறுகதை, புதுக்கவிதை என்ற இலக்கிய வடிவங்களின் மூலம் சமுதாய அவலங்களை வெளிப்படுத்தியவர் கந்தவான். க. நாகலிங்கம் என்ற பெயருடன் கருவு+ல அதிகாரியாக அரசு பணியை தொடங்கியவர். சமூகப் போராளியாக தன்னை வளர்த்துக் கொண்ட நிலையில் இந்தியாவில் சோசலிச சமத்துவ சமுதாயம் அமைய வேண்டும் என்ற மனித நேய நோக்கில் தனது இறுதி மூச்சு வரை உழைத்தவர். சிதிலம் அடைந்துப் போன முதலாளித்துவச் சமுதாயத்தின் வர்க்க முரண்பாடுகளையும் சமூக அவலங்களையும் கவிதைகள் மூலம் கந்தர்வன் வெளிப்படுத்தியுள்ளார்.*

அறிவியல் கண்டுபிடிப்புகளும் வறுமையும்

இந்தியாவின் அறிவியல் கண்டுபிடிப்புகளும் அதன் வெற்றியும் நம்மை ஒருபுறம் ஆச்சரியப்பட வைக்கின்றது. மறுபுறம் இதன் ஒரு சுவடும் தெரியாத கூட்டம் தனது அடுத்த நேர வாழ்க்கையை நடத்துவதற்கே போராடிக் கொண்டிருக்கின்றது.

"ஆரியபட்டா
வானத்தை கிழித்தது
அணுகுண்டு சோதனை
பு+மியைக் கிழித்தது
அரைக்கை சட்டை
கிழிந்தது மட்டுமே
நினைவில் நிற்கிறது" (கந்தர்வன் கவிதைகள் : ப-7)

இக்கவிதை இந்தியா விண்வெளி ஆய்வுக்காகவும், அணு ஆயுதக் கண்டு பிடிப்புகளுக்காகவும் கோடி கோடியாய் பணத்தைச் செலவு செய்வதை சுட்டுகிறது. முதலாளித்துவ அரசுகள் முதலாளிகளின் வர்த்தகச் சந்தையாக விண்வெளி ஆய்வை விரிவுபடுத்தி லாப வேட்கையை பெருக்குகிறது. மாறாக வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும் மக்களின் வாழ்வை மாற்றி அமைக்க அறிவியல் கண்டுபிடிப்புகள் பயன்படவில்லை என்று கூறுவதில் இருந்து அரசுகளின் வர்க்க உணர்வை வெளிப்படுத்துகிறார்.

வர்க்கச் சண்டை

வர்க்கச் சண்டை என்ற கவிதையில் அதிகார வர்க்கத்திற்கும் அடிமை வர்க்கத்திற்குமான வாழ்க்கை முறை இயைந்தது அல்ல. எப்போதும் முரண்பாடானது என்பதை மிக துல்லியமாக பதிவு செய்கிறார்.

"பழைய சோறும்
பாதாம் கீறும்
ஒரு வயிற்றுணவாய்
ஒரு நாளும் ஆவதில்லை
அப்படியே போனாலும்
வர்க்கச் சண்டை
வயிற்றுக்குள்ளும் நடக்கும்" (கந்தர்வன் கவிதைகள் : ப-20)

இரு வேறு முரண்பட்ட வர்க்கங்களை எடுத்துக் காட்டினாலும் கவிஞரின் குரல் உழைக்கும் வர்க்கத்தின் குரலாகவே ஒலிக்கிறது. வர்க்க முரண்பாடு வர்க்க சமுதாயத்தின் வாழ்வில் எல்லா நிலைகளிலும் உள்ளது. பாட்டாளி வர்க்கம் தன்னை சமரசம் செய்து கொள்ளாது எல்லா நிலைகளிலும் தனது உரிமைக்கும் விடுதலைக்குமான போராட்டத்தைக் கூர்தீட்டிக் கொண்டே இருக்கும் என்ற மார்க்சிய சிந்தனையை இக்கவிதை மூலம் வெளிப்படுத்துகிறார்.

சுரண்டல் தாகம்

முதலாளி வர்க்கம் எந்த நிலையிலும், எந்த ரூபத்திலும் உழைக்கும் வர்க்கத்தின் வாழ்வைச் சூரையாடுவதையே அதன் தாகமாக கொண்டுள்ளது. முதலாளி வர்க்கத்தின் சுரண்டல் முறையை மார்க்ஸ் கூறும் போது "கொல்லப்பட்டவர்களின் மண்டை ஓடுகளிலிருந்து ரத்தத்தைக் குடிக்க விரும்பும் நர மாமிச பட்சினி"5 இக்கருத்தையே கந்தர்வனும் மார்க்சிய அழகியலோடு கவிதையாக்குகிறார்.

"மா கனிந்த போது
காக்கை குடைந்து உறிஞ்சும்
மாதுளை கனிந்த போது
கூகையும் கோட்டனும்
கொத்திக் குதறும்
பப்பாளி பழுக்கயில்
விருந்துக்குப் பருந்து வரும்
எங்கள் தோட்டத்தில்
ஏராளம் கனி மரங்கள்" (கந்தர்வன் கவிதைகள் : ப-9)

*உழைப்பவன் தனது உதிரத்தைச் சிந்தி உற்பத்திச் செய்கின்ற விளைபொருளை உண்பதற்குக் காக்கையும், கூகையும் கோட்டானும் பருந்தும் வரும் என்று கூறுவது, "படைப்பாளனின் புதிய உள்ளடக்கத்தில்தான் முக்கியமாக சோசலிசக் கலை இலக்கியத்தின் புதுமை அடங்கிக் கிடக்கிறது"6 என்ற லெனின் கூற்றை உறுதிப்படுத்துகிறது. முதலாளித்துவம் என்கின்ற சுரண்டல் பறவை வெவ்வேறு வடிவில் வந்து கனி வர்க்கங்கள் என்ற உழைப்பாளியின் உழைப்பைச் சுரண்டுகின்றன என்ற புதுமையான உள்ளடக்கத்தின் மூலம் பாட்டாளி வர்க்க சார்பு நிலைபாட்டை வெளிப்படுத்துகிறார்.*

*பொருளாதார ஏற்றத் தாழ்வு*

*இந்தியாவில் ஆட்சி செய்து கொண்டிருந்த ஆங்கிலேயர்களை ஆட்சி அதிகாரத்திலிருந்து விரட்டியடித்துவிட்டால் நமது தேசம் விடுதலையடையும் மக்கள் எல்லோரும் சமத்துவமாய் நடத்தப்படுவார்கள். எல்லோருக்கும் எல்லாம் என்ற பொதுமைக் கோட்பாடு ஆட்சி செய்யும் என்ற எதிர்பார்ப்பு ஒவ்வொரு இந்திய குடிமகனிடமும் இருந்தது. விடுதலைப் பெற்ற பிறகு அதன் பலன்களை ஒரு சிலரே அனுபவிக்க மற்றவர்கள் ஏக்கத்தோடு பார்க்கும் நிலையும் ஏற்பட்டது. அரசியலமைப்புச் சட்டத்தின் முன் இந்தியர் அனைவரும் சமம் என்று ஆன போதும். சமத்துவம் கேளிவிக் குறியானது. இந்த நிலையை விமர்சனம் செய்யும் கவிஞர்.*

*"தேச அன்னைக்குச்*
*சுதந்திரப் பிரசவம் பாரத்தவர்கள்*
*ஒரு வளர்ந்த கட்டியையே*
*பிள்ளை யென்று கூறி*
*பிரகடனப்படுத்தினார்கள்*
..............................................
..............................................
*ஆவடிப் பக்கம் ஆடம்பரமாய்க் கூடி*
*கைகால்கள் செய்யும்படி*
*எல்லாக் கம்பெனி*
*முதலாளிகளுக்கும்*
*காண்ட்ராக்ட் கொடுத்தார்கள்" (கந்தர்வன் கவிதைகள் : ப-22)*

*இந்தியாவிற்கு கிடைத்த சுதந்திரம் குறைகொண்டது. அக்குறையைப் போக்க ஒப்பந்தம் பெற்றவர்கள் முதலாளிகள் என்று கூறுவது இந்திய சமூகத்தில் எல்லா நிலைகளிலும் உயர்வானவர்களாக தீர்மானகர சக்தியாக இன்று விளங்குபவர்கள் முதலாளிகளே. இந்திய சுதந்திரத்தின் முழு பலன்களையும் நன்கு அனுபவிப்பவர்களும் அவர்களே. ஆனால் கருத்தாலும், கரத்தாலும் உழைக்கின்ற உழைப்பாளி மக்கள் இன்றும் தங்கள் உரிமைகளை பெறுவதற்கு யாசகர்களை போல கைகட்டி நிற்பதற்கு இந்திய ஆட்சியாளர்களின் தவறான அரசியல், பொருளாதாரக் கொள்கைகளே காரணம் என்று கூறுகிறார்.*

*சாதியத்தின் பிடிமானமும் விடுதலையும் :*

*"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா*
*செய்தொழில் வேற்றுமையான்" 7*

*மனிதனுக்கு மனிதன் வேற்றுமை இல்லை. அவன் பிறப்பால் சமத்துவமானவனே. குறிப்பாக, செய்யும் தொழில் காரணமாக வேற்றுமை இல்லவே இல்லை என்கிறார் திருவள்ளுவர். பாரதி இந்தியச் சமூகத்தை சாதிய சமூகமாகவே பார்க்கிறான். அச்சாதிய சமூகத்தில் எல்லா சாதிகளும் சமத்துவமாக நடத்தப்படவேண்டும். அதுவே உண்மையான விடுதலையாக இருக்க முடியும் என்பதை உணர்த்தும் விதமாக.*

*"பறை யருக்கும் மிங்குதீயர்*
*புலைய ருக்கும் விடுதலை*
*பரவ ரோடு குறவருக்கு*
*மறவ ருக்கும் விடுதலை" 8*

*இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முன்னரே விடுதலை கிடைத்துவிட்டது என்று ஆனந்தப் பள்ளுப் பாடிய பாரதி ஆங்கிலேயர்களிடம் இருந்து இந்திய சமூகம் பெறுகின்ற விடுதலை சமுதாயத்தால் உயர்ந்த நிலையில் உள்ளவர்களுக்கான விடுதலையாக இருந்து விடக்கூடாது என்பதில்*

தெளிவாக இருந்துள்ளான். எனவே தான் அடிமைப்பட்ட சாதிகள் ஒவ்வொன்றையும் கூறி அச்சாதிகள் அனைத்தையும் உள்ளடக்கிய விடுதலையை வேண்டி சுதந்திரப் பள்ளு பாடுகிறார். சுதந்திர இந்தியாவில் பாரதியின் கனவு பொய்த்துப் போன சூழலில் கந்தர்வன்

"பாரதி சொல்வான்
பறையருக்கும் இங்கு தீயர்
புலையருக்கும் விடுதலை என்றே
விடுதலையில் இவர்களெல்லாம்
விடுபட்ட தலைகள் இன்று" (கந்தர்வன் கவிதைகள் : ப-116)

இன்று என்று கந்தர்வன் கூறுவது சுதந்திரம் கிடைத்து எழுபது ஆண்டுகள் கழிந்த நிலையைச் சுட்டுகிறது. இன்றும் அடிதட்டு உழைக்கும் மக்கள் ஆதிக்க தெருக்களில் நடக்கவும், பொதுக் குளங்களில் குளிக்கவும் கோயிலுக்குள் சென்று வழிபடவும், சமூக நீதியை நிலை நாட்ட உருவாக்கப்பட்ட தனித் தொகுதிகளில் போட்டியிடவும் ஆதிக்க சக்திகள் எதிர்த்தே வருகின்றனர். அப்படியானால் இந்திய விடுதலை இவர்களுக்குப் பொருந்தாதா அல்லது அவர்கள் விடுபட்டுப் போன தலைகளா என்ற கேள்வியை முன் வைத்து இந்திய பொதுச் சமூகம் அடித்தட்டு மக்களுக்கு பண்பாட்டு விடுதலையும் பொருளாதார விடுதலையும் இன்னும் கொடுக்கவில்லை என்ற உண்மையை பாடுபொருளாக்கியுள்ளார்.

கந்தர்வனும் பெண் விடுதலையும்

அரசியல், குடும்பம், கல்வி, தொழில், பொருளாதாரம், கலாச்சாரம் என்று அனைத்துத் துறைகளிலும் பெண்களின் உரிமைகளுக்காக போராடுவது போன்ற தளங்களில் நின்று இலக்கியங்களைப் படைப்பது பெண்ணியப் படைப்பாகப் பார்க்கப்படுகிறது. இக்கொள்கை வழி நின்று படிதாண்டாப் பத்தினிகளாகப் பெண்களை வீட்டுக்குள் பு+ட்டி பதுக்கும் விந்தைச் சமூகத்தை எள்ளல் செய்கிறார் கந்தர்வன்.

"மரத்தில் கட்டிய
பசு மாடு
கயிற்றின் நீளம்
சுற்றி வரும்
வாசல் வரைக்கும்
அளவெடுத்து
அவளைக் கட்டிய
கயிறொன்று" (கந்தர்வன் கவிதைகள் : ப-192)

பசுமாடு என்ற சொல் பெண்ணின் குறியீடாக கையாளப்பட்டுள்ளது. பெண்களும் ஒரு வகையில் வளர்ப்பு மிருகங்களாகவே வளர்க்கப்படுகின்றனர். பால் வாங்க வாசலுக்கு வரும் பெண், காய்கறி வாங்க வாசலுக்கு வரும் பெண், சாமி பார்க்க வாசலுக்கு வரும் பெண், பிச்சை போட வாசலுக்கு வரும் பெண். இன்றைய பொருளாதார சூழலில் குடும்பப் பொருளாதார தேவையை பு+ர்த்தி செய்ய அலுவலக வாசல் வரை அனுமதிக்கப்பட்ட பெண் என்று பெண்ணின் இயங்கு வெளியை பாடு பொருளாக்கியுள்ளார்.

"நாளும் கிழமையும்
நலிந்தோர் கில்லை
ஞாயிற்றுக் கிழமையும்
பெண்களுக்கில்லை"( கந்தர்வன் கவிதைகள் : ப-14)

என்ற பாடல் வழி நலிந்தவர் வாழ்வும் பெண்களின் வாழ்வும் சமத்துவமானது. இருவர் வாழ்வும் அடிமைத்தளைகளால் கட்டப்பட்டவை என்கிறார்.

புதிய கல்விக் கொள்கை

மத்திய அரசின் புதிய கல்விக் கொள்கையானது சமத்துவத்தை கண்டடைய வழிகோலும் சமூக நீதிக்கு எதிராக கட்டமைக்கப்பட்டுள்ளது. பொருளாதார ஏற்றத்தாழ்வையும், வர்க்க நலனையும் வளர்ந்தெடுக்கும் விதமாக திட்டமிடப்படுகிறது. ஒன்றாம் வகுப்புக் கல்வி என்பதே பல்வேறு ஏற்றத்தாழ்வோடு, பல்வேறு நிலைகளில் கற்று கொடுக்கப்படுகிறது. இதற்குக்

காரணம் கல்வி கற்கும் நிலையிலே மாணவனுக்குள் ஏற்றத் தாழ்வை உருவாக்குவதாகும். அவர்களுக்கு தங்கள் வர்க்கத்தைப் புரியவைப்பதாகும்.

"ஈரத்தோடும்
பாசத்தோடும்
ஆரம்பப் பள்ளிகளையே
அடியோடு மூடிவிட்டு
அங்கன் வாடிகளில்
அக்காவிடம் கற்கச் சொல்லி
ஆணை வருகிறது" (கந்தர்வன் கவிதைகள் : ப-232)

கல்வியைக் கடைச் சரக்காக்கும் அரசு தனது குறைந்தபட்ச ஆரம்பக் கல்வியையும் இழுத்து மூடுவதற்குத் தயாரிப்பு வேலைகளில் இறங்கியதன் விளைவாகவே அங்கன் வாடிகளை உருவாக்குகின்றன என்ற அரசின் கல்விக்கொள்கை நிலைபாட்டை வெளிப்படுத்துகிறார். இந்திய சமூகத்தில் அடிப்படைக் கல்வியே வர்க்கச் சார்புடையதாக கட்டமைக்கப்பட்டுள்ளது. உண்டி உறைவிட பள்ளிகள், சர்வதேசப் பள்ளிகள், நவோதயாப் பள்ளிகள், பதின் நிலைப் பள்ளிகள், அரசு தொடக்கப் பள்ளிகள், அங்கன்வாடிகள் என்று எத்தனை எத்தனை வேறுபாடுகள் இது தரத்தை நிர்ணயிக்க உருவாக்கப்பட்டது அன்று வர்க்க நிலையை உறுதிப்படுத்த உருவாக்கப்பட்டதேயாகும் என்று கூறுவதிலிருந்து உழைக்கும் வர்க்கத்தின் சார்பாளாராக நிற்கிறார் கந்தர்வன்.

ஆய்வு நிறைவுரை

இந்தியச் சமூகம் பொருளாதார ஏற்றத்தாழ்வுடைய சாதியச் சமூகம் என்பதை கந்தர்வன் கவிதைகள் வெளிப்படுத்தி நிற்கின்றன. சுதந்திர இந்தியாவின் அறிவியல் கண்டுபிடிப்புகள் வளர்ச்சிக்கு வித்திட்டபோதும் அது அடித்தட்டு மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு உதவவில்லை என்பதை உணர்த்துகிறது. முரண்பட்ட சமூகங்களுக்குள் வர்க்கச் சண்டை நிகழ்ந்தே தீரும் என்று உறுதிப்படுத்துகிறார். சுரண்டல் என்பது முதலாளித்துவத்தின் வெற்றியின் தாரக மந்திரம் என்பதை உணர்த்துகிறார். நலிந்தப் பிரிவு மக்களின் வாழ்வியலோடு ஒப்பானவர்கள் பெண்கள் என்று பெண்களின் தாழ்வுநிலையை வெளிப்படுத்துகிறார். இந்தியாவின் புதியகல்விக் கொள்கை வர்க்க முரண்களை வளர்த்தெடுக்கவே வகுக்கப்பட்டுள்ளது என்கிறார்.

அடிக்குறிப்புகள்


1. பாலுச்சாமி. நா, வாழ்வியல் களஞ்சியம் தொகுதி எட்டு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 2004. ப-588.
2. ஜார்ஜ் பொலிட்சர். ,மார்க்சிய மெய்ஞ்ஞானம், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் சென்னை, 1984. ப-63.
3. மார்க்ஸ், ஏங்கல்ஸ்., கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை , முன்னேற்றப் பதிப்பகம் மாஸ்கோ, 1975. ப-48.
4. தான்யா.கோ , இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் கவிதைகளில் மார்க்சியக் கொள்கைகளின் தாக்கம் இராசகிளி பிரிண்டர்ஸ், சென்னை, 1980. ப-68.
5. பரமேஸ்வரன் பி.ஆர். , சோசலிசமும் முதலாளித்துவம், சக்கரம் புக்ஸ், சென்னை, 1990. ப-100.
6. ஜீவா – "சோசலிச யதார்த்தவாதம் பற்றி, பாவை பப்ளிகேசன்ஸ், சென்னை, 2007. ப.29
7. வரதராசனார். மு – "திருக்குறள் தெளிவுரை", தென்னிந்திய சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், சென்னை, 1996. பா.972
8. மெய்யப்பன். ச – "பாரதியார் கவிதைகள்", மாணிக்கவாசகர் பதிப்பகம், சென்னை, 1994. பா.30
9. கந்தர்வன் – "கந்தர்வன் கவிதைகள்" சந்தியா பதிப்பகம், சென்னை, 2002.


********* ********* ********** ********* ********* ********** ********** **********